

இந்துத்துவா கூட்டத்தை

தலைதூக்க விடாமல் தடுக்கும் மாநிலம் தமிழ்நாடு!

காமராசர் அரங்கத்தில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் - வைகோ எம்.பி. பேச்சு!

சென்னை, அக்.18-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில், ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. வெறுப்பு அரசியலை எதிர்த்து இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கண்டனக் கூட்டம், 14.10.2024 அன்று சென்னை, காமராஜர் அரங்கில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பங்கேற்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் உரையாற்றும்போது, இந்துத்துவா கூட்டத்தை தலைதூக்க விடாமல் தடுக்கும் மாநிலம் தமிழ்நாடு என்றார்.

அவரது உரை வருமாறு:-

கதிர்வெடித்துப் பிளம்பு விழ கடல் கொதித்துச் சூடாற்ற முழுமைமிகு நிலப்பரப்பின் முதற் பிறப்புத் தோன்றிவிட நதி வருமுன் மணல் தருமுன் முன்தோன்றி மூத்த தமிழுக்கு ஆராதனை செய்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, தமிழகத்தின் பொற்காலமாக மலர்ந்திருக்கக் கூடிய இந்த நேரத்தில், சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்து, அடுத்தப் போர்க்களத்திற்கு மொத்த இந்தியாவையும் ஆயத்தப்படுத்த வேண்டும் என்ற உன்னதமான குறிக்கோளோடு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஆருயிர் சகோதரர் செல்வப்பெருந்தகை அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கலைஞரின் அருமை மகள், நாடாளுமன்றத்தில் அற்புதமாகப் பேசுகிறார் என்று எல்லோரும் பாராட்டத்தக்க அளவிற்கு இயக்கத்திற்கும், நாட்டுக்கும் தொண்டு செய்துகொண்டிருக்கின்ற என்னுடைய அருமைத் தங்கை கனிமொழி கலைஞர் அவர்களே, இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கின்ற அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் சூரஜ் எம்.என். ஹெக்டே, சட்டமன்ற உறுப்பினர் ராஜேஷ்குமார், நிகழ்ச்சியில் பங்கேற்று பணி நிமித்தம் விடை பெற்றுச் சென்றிருக்கின்ற திராவிடர் கழகத் தலைவர் மானமிகு அண்ணன் வீரமணி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் சகோதரர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு செயலாளர் சகோதரர் முத்தரசன், உணர்ச்சிகரமாக இங்கே உரையாற்றி நிகழ்ச்சியை உன்னதப்படுத்தியிருக்கக்கூடிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் ஆருயிர் சகோதரர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இயக்கத்தின் தலைவர் கண்ணியத்திற்குரிய பேராசிரியர் காதர் மொய்தீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் ஈ.ஆர்.ஈஸ்வரன், காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களான அன்புக்குரிய கே.வி.தங்கபாலு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், சு.திருநாவுக்கரசர், கிருஷ்ணசாமி, கே.எஸ்.அழகிரி, பீட்டர் அல்போன்ஸ், திரளாக வருகை தந்து இந்த நிகழ்ச்சியை இந்தியாவுக்கே வழிகாட்டும் நிகழ்ச்சியாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கக்கூடிய இந்தியா கூட்டணி கட்சிகளின் உயிர் நாதமாகத் திகழுகின்ற தொண்டர்கள், தோழர்கள், தாய்மார்கள், பெரியோர்கள், ஜனநாயகத்தின் விழிகளான செவிகளான செய்தியாளர்கள், ஊடக நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்.

எந்தப் பெயரைச் சொன்னால், எந்தப் பெயரை உச்சரித்தால் உண்மையான காங்கிரஸ் தொண்டர்களின் நாடி நரம்புகளில் மின்னல் பாயுமோ அந்தப் பெயருக்கு உரியவரின் பெயரிலான மண்டபத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்திய நாட்டிற்கு இரண்டு பிரதம அமைச்சர்களை உருவாக்கித் தந்தவர். பல ஆண்டுகள் சிறைவாசத்தை ஏற்று, 1942 இல் வெள்ளையனே வெளியேறு ஆகஸ்டு புரட்சியில் மும்பை மாநகரத்திலே காந்தியடிகள் அழைப்புக் கொடுத்ததார்.

காமராஜர் தமிழகத்தை புரட்சிகரமாகத் தயாரித்தார். அதன்பிறகு பல ஆண்டுகள் சிறையில் இருந்தார். அவர் குடியாத்தம் தொகுதியில் போட்டியிட்டபோது, எதிர்க்கட்சியாக இருந்தாலும் "குணாளா வருக! குலக் கொழுந்தே வருக! குடியாத்தம் தொகுதியிலே வெல்க!" என்று அறிஞர் அண்ணா அழைத்தார். அந்தத் தொகுதியில் காமராஜர் வெற்றி பெற்று தமிழகத்தின் முதலமைச்சரானார். உலகத்தில் தமிழனுக்கு ஓர் அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருந்தலைவர் காமராஜர் பெயராலே அமைந்திருக்கின்ற மண்டபத்திலே இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதுபோன்ற நிகழ்ச்சி தமிழகமெங்கும் நடைபெற வேண்டும். மாவட்டந்தோறும் நடைபெற வேண்டும்.

காங்கிரஸ் கட்சி இதை முன்னெடுத்தது குறித்து நான் பெருமைப்படுகிறேன்; வாழ்த்துகிறேன். வருங்காலத்திலும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்கட்டும்.

என்னுடைய ஆருயிர் சகோதரர் தளபதி மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இந்தியா கூட்டணி தமிழகத்தில் சிறப்பாக இயங்கி நூற்றுக்கு நூறு வெற்றியைப் பெற்றது. அவருடைய திராவிட மாடல் ஆட்சியை கனடா உள்ளிட்ட மூன்று நாடுகள் பின்பற்றுகின்றன. அவர் செயல்படுத்துகின்ற திட்டங்களை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று இந்தியாவில் பல மாநிலங்கள் கூறுகின்றன.

மகிழ்ச்சிகரமான இந்தச் சூழ்நிலையில், பேராபத்தான சூழலும் உருவாகி வருகிறது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நம் தலைக்கு மேல் பேராபத்து கொடுவாளாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரே அணி !

கன்னியாகுமரியிலும் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றி பெறுகிறார். காஷ்மீரத்திலும் இந்தியா கூட்டணி வெற்றி பெறுகிறது. ஆக, காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை எதிர்க்கட்சிகள் நாம் ஒரே அணியாகத் திரண்டு நின்று, வருகிற தேர்தலில் வெற்றி வாகை சூட வேண்டும்.

இந்திய அரசியல் வானத்தில் நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலித்துக் கொண்டிருக்கின்ற தன்னை ஒரு சாதாரண தொண்டனாக ஆக்கிக் கொண்டு கன்னியாகுமரியில் நீராடி, அங்கிருந்து புறப்பட்டு காஷ்மீரம் வரை நான்காயிரம் கிலோ மீட்டர் நடந்தே இந்திய ஒற்றுமைப் பயணத்தை மேற்கொண்டவரும், மணிப்பூரிலிருந்து பஞ்சாப் மாநிலம் வரை இந்திய ஒற்றுமை நீதிப் பயணம் நடத்தி கோடிக்கணக்கான மக்களைச் சந்தித்த உன்னதமான தலைவருமான ராகுல்காந்தி அவர்களை வீழ்த்த வேண்டும் என்று நினைத்தால், அது உங்களால் இயலாது. அவர் மக்கள் மனதில் கொலுவீற்றிருக்கிறார். இந்தக் கூட்டத்தின் எதிரொலி டெல்லி பட்டணத்திற்குக் கேட்க வேண்டும்.

நாட்டை ஆளுகின்ற தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்குச் சொல்வேன், ஆர்.எஸ்.எஸும், பாரதிய ஜனதா கட்சியும், இந்துத்துவா சக்திகளும், சங்பரிவார் கூட்டமும் வெறுப்பு அரசியலைச் செய்து, எப்படியாவது இந்தியாவை ஒழித்துக்கட்டிவிட வேண்டும் என்று கருதுகிறார்கள்.

பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸும் சேர்ந்து உத்திரப்பிரதேசம் மாநிலம், பிரயாக்நகரில் தர்மசன்சத் என்ற மாநாட்டை ஏற்பாடு செய்தார்கள். அதில் 32 பக்க பிரகடனத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் முதல் பாராவிலேயே, இந்த நாட்டை இந்தியா என்று யாரும் சொல்லக் கூடாது. 'பாரத்' என்றுதான் அழைக்கப்பட வேண்டும் என்றும், இந்தியாவில் முசுலிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் ஓட்டுரிமை கிடையாது. மனுதர்மம்தான் இந்திய அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்கும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்கள். அதை நாடு முழுவதும் விநியோகமும் செய்தார்கள். இப்படிப்பட்ட துணிச்சல் எப்படி வந்தது?

நான் பேசுவதற்கு மன்னித்துக் கொள்ள வேண்டும். பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். கொலைகார கூட்டத்தைப் பார்த்துக் கேட்கிறேன், 500 ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் இந்தியா எங்கே இருந்தது? வெள்ளைக்காரனின் துப்பாக்கியும், லத்திக் கம்பும், காந்தியடிகளும், பண்டித நேருவும், சுபாஷ்சந்திர போஸ் உள்ளிட்ட தலைவர்களும் அனைத்து சமஸ்தானங்களையும் ஒன்றுபடுத்தி ஒரு நாடாக உருவாக்கியதற்குப் பிறகுதான் இந்தியா தலையெடுத்தது. பல தேசிய இனங்கள் இந்த உபகண்டத்தில் இருக்கின்றன. பல தேசிய இனங்களைக் கொண்ட நாடுதான் இந்தியா. ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் ஒரு அடையாளம் இருக்கிறது. அதைப் போல எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக இருந்து, மதச்சார்பின்மையைப் பாதுகாத்து, இந்துராஷ்டிரா என்று கூச்சல் எழுப்புகின்ற இந்துத்துவா கூட்டத்தை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் தலையெடுக்க விடாமல் தடுப்பதற்கு வழிகாட்டுகின்ற மாநிலம்தான் இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தாய்த் தமிழகம் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அவர்கள் கொலை செய்வதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தியைப் போன்ற ஓர் உருவத்தை மேடையில் வைத்து, நாதுராம் விநாயக கோட்சே செய்ததை நாங்கள் செய்கிறோம் என்று பாரதிய ஜனதா கட்சி பெண்மணி கையில் பொம்மை துப்பாக்கியை வைத்துக்கொண்டு காந்தியாரின் உருவத்தைப் பார்த்து சுடுவதைப் போன்ற நிகழ்ச்சியை அமைத்தார்கள். இதுபோன்ற நிலைமை வர வேண்டும் என்று மூன்று இடங்களில் செய்தார். இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களுக்கு தைரியத்தைக் கொடுத்தது யார்?

கல்புர்கி கொலை!

அவர்கள்தான் கல்புர்கியைக் கொன்றார்கள். கோவிந்த் பன்சாரேயைக் கொன்றார்கள். நரேந்திர தபோல்கரைக் கொன்றார்கள். கௌரி லங்கேஷ் என்ற பெண்மணியைக் கொன்றார்கள். தாத்ரியில் 104 டிகிரி காய்ச்சலுடன் தன்னுடைய வீட்டில் படுத்திருந்த முகமது அத்லக் என்பவரை வெளியே இழுத்துக் கொண்டு வந்து, மாட்டை வெட்டி கறியைக் கொண்டுவந்ததாகச் சொல்லி தலை முதல் கால் வரை கடுமையான ஆயுதங்களால் தாக்கி அந்த இடத்திலேயே உயிரைப் பறித்தார்கள்.

செப்டம்பர் 9 ஆம் தேதி, ராகுல் காந்தி அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு வாழ்கின்ற இந்திய மக்களைச் சந்தித்து, சமூகநீதிக்கு நல்ல விளக்கங்களைக் கொடுத்தார். ஆனால், அவர் சமூகநீதிக்கும், இட ஒதுக்கீட்டுக்கும் எதிரி என்று பா.ஜ.க., சங் பரிவார் கூட்டம் பிரச்சாரம் செய்தது. இரண்டு நாள் கழித்து செப்டம்பர் 11 இல், பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவராகிய தர்வீந்தர்சிங் பிட்டு என்பவர் என்ன சொன்னார் என்றால், "ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள் ராகுல்காந்தி! தடம் பிறளாதீர்கள்! உங்கள் தலை இருக்காது! உயிர் இருக்காது" என்று சொல்லிவிட்டு, "உங்கள் பாட்டிக்கு ஏற்பட்ட கதிதான் உங்களுக்கும் ஏற்படும்" என்று பகிரங்கமாகச் சொன்னதை எவரும் கண்டிக்கவில்லை.

இந்திய இரயில்வே இணை அமைச்சர், இந்த நாட்டின் ஒரே பயங்கரவாதி ராகுல்தான் என்று பேசினார். மற்றும் இரண்டு அமைச்சர்கள் அதை வரவேற்றுப் பேசினார்கள். மராட்டிய முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே அமைப்பிலே இருக்கின்ற சிவசேனா எம்.எல்.ஏ. ஒருவன், ராகுல்காந்தியின் நாக்கை அறுத்துக்கொண்டு வருபவர்களுக்கு 11 இலட்சம் பரிசு கொடுக்கப்படும் என்றான். என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இப்படி எல்லாம் பேசுகின்றவர்கள், எந்தத் தலைவருடைய பெயரால் இந்த மண்டபம் அமைந்திருக்கிறதோ, அந்த மாபெரும் தலைவரை டெல்லியில் கொல்வதற்கு நிர்வாணச் சாமியார்களை அனுப்பியது. அதன் பின்னணியில் ஆர்.எஸ்.எஸ். கூட்டம் இருந்தது. அன்றைக்கு காமராஜர் அவர்களைத் தீர்த்துக் கட்டுவதற்கு நிர்வாணச் சாமியார்கள் ஊர்வலமாக வந்ததும், அங்கிருந்த எளிய வேலைக்காரர்கள் அவரைக் காப்பாற்றி வெளியே அனுப்பியதையும் மறந்துவிடக் கூடாது.

அந்தக் காமராஜர் மண்டபத்தில் நாம் இன்றைக்கு உறுதி எடுக்கிறோம், இந்தக் கொலைகார கும்பலை தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் மண்ணாகிய தமிழகத்தில் தலையெடுக்க விட மாட்டோம் என்பது மட்டுமல்ல, இந்தியா முழுவதும் தலையெடுக்க விடக் கூடாது. அதை நிச்சயம் செய்ய முடியும்.

இந்தியா என்ற கூட்டணியை அமைத்திருக்கின்றோம். இது வீறு கொண்டு எழும். இடைக்காலத்தில் ஏற்பட்ட சிறு சிறு பிணக்குகள் விலகி மகத்தான வெற்றி பெறும்.

பாசிசம் என்ற வார்த்தை யாரால் வந்தது? இத்தாலியின் பெனிட்டோ முசோலினியால் வந்தது. அவன் தான் தன் கட்சியை பாசிஸ்ட் கட்சி என்று சொன்னான். எதிர்க்கட்சியினரை எல்லாம் வேட்டையாடினான். நடுத்தெருவில் விட்டுச் சுட்டுக் கொன்றான். தூக்கிலே தொங்கவிட்டான். நாஜிகளின் தலைவர் அடால்ஃப் ஹிட்லரோடு கரம் கோர்த்துக் கொண்டான். நாஜிச கோட்பாட்டை ஹிட்லர் கொண்டுவந்தான். அவன் தான் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கருதி, பெர்லினில் இருக்கக்கூடிய நாடாளுமன்றக் கட்டிடத்திற்கு நள்ளிரவில் தீ வைத்துவிட்டு, இந்தத் தீயை வைத்தவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று ஹிட்லர் பகிரங்கமாக அறிவித்தான். பொழுது விடிவதற்கு உள்ளாகவே ஏராளமான கம்யூனிஸ்டு தோழர்களை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று குவித்தான்.

அபிசினியாவில் முசோலினி வெற்றிகளைப் பெற்றான். ஆனால் கடைசியில் என்ன ஆயிற்று? பாசிசம் என்ன ஆயிற்று? பாசிசத்திற்கு எப்படிப்பட்ட முடிவு ஏற்பட்டது? மரக் கிளையில் தலைகீழாக தொங்க விடப்பட்டான். போகிறவர்கள், வருகிறவர்கள் அந்த உருவத்தை செருப்பால் அடித்தார்கள். அப்படித்தான் கொல்லப்பட்டான்.

ஹிட்லர் சாவதென்று முடிவெடுத்துவிட்டு, தன் மனதுக்குப் பிடித்தவரையும் அதே கைத் துப்பாக்கியைக் கொடுத்து கொல்லச் சொல்லிவிட்டு, தானும் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மாண்டு மடிந்தான். அதற்கு முன்னர் கோயபல்ஸ் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு தானும் தன் குடும்பத்தையும் அழித்துக் கொண்டான். பாசிசம் ஒருபோதும் வெற்றி பெறாது.

யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்ற தத்துவத்தை உலகுக்குக் கொடுத்தது தாயகமாம் தமிழகம். அப்படிப்பட்ட தமிழகத்திலிருந்து நான் சொல்கிறேன், நீங்கள் இங்கே ஆரம்பித்து வைத்திருக்கக்கூடிய இந்தக் கூட்டத்தின் நோக்கம், இந்தியா முழுவதும் பரவ வேண்டும்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில், இந்தியா கூட்டணி வீறுகொண்டு எழுந்து, வடநாட்டிலும் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது.

திருமா இருக்கிறார், சகோதரி கனிமொழி இருக்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். வட இந்தியாவில், டெல்லி பட்டணத்தில் பெட்ரோல் பங்க் போன்று நாடாளுமன்றக் கட்டடத்தை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கட்டடத்திற்குள் அவர்கள் சேட்டைகள் செய்தால், அதை தடுக்கின்ற விதத்தில் தமிழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள் என்பதை நானும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுக்கு அச்சம் கிடையாது. எங்களுக்கு பயம் கிடையாது. எங்கள் இலட்சியத்தில் நேர்மை இருக்கின்றது எங்கள் கொள்கையில் உறுதி இருக்கிறது. நாங்கள் நாட்டுக்காக, மக்களுக்காகப் பாடுபடுகிறோம். அதனால்தான் இந்த நாடு உனக்கு என்ன செய்தது? என்று கேட்காதே. நீ இந்த நாட்டுக்காக என்ன செய்தாய் என்று கேள். அப்படிப்பட்டவர்கள் தான் இரத்த நாளங்கள் என கலைஞர் அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட இரத்த நாளங்களைக் கொண்ட கூட்டமைப்பாக இந்தியா கூட்டணி அமைந்திருக்கின்றது.

நரேந்திர மோடியின் கூட்டம் ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். பாபர் மசூதியை இடித்தார்கள். இராமர் கோவிலைக் கட்டினார்கள். காஷ்மீரத்தைத் துண்டாடுவோம் என்று சொன்னார்கள். அதை நிறைவேற்றி விட்டார்கள். தற்போது பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியென்றால், இசுலாமியர்கள், கிறித்தவர்கள், பார்சிகள், சமண மதத்தவர்கள் யாரும் இங்கே வாழ முடியாது.

அது மட்டுமல்ல, ஒரே கட்சி; ஒரே கொடி; ஒரே தேர்தல்; ஒரே நாடு என்று சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளவே முடியாது. அது திணிக்கப்பட்டால், சோவியத் யூனியனைப் பாதுகாக்க செஞ்சேனை என்று சொல்லப்படுகின்ற ரெட் ஆர்மி, ஹிட்லரை முறியடித்த சேனை, இரண்டாம் உலக யுத்தத்தில் திருப்பத்தை ஏற்படுத்திய சேனை கம்யூனிச மண்டலத்தைப் பாதுகாத்துக் கொண்டிருந்தும்கூட ரஷ்ய மொழியைத் திணித்ததனால் 15 நாடுகளாகப் பிரிந்து போயிற்று. இன்றைக்கு சோவியத் மண்டலம் இல்லை. அவை தனித்தனி நாடுகளாக இருக்கின்றன. தற்போது ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் நினைப்பது போல உருவாக்க முடியாது.

நாடாளுமன்ற முறை ஜனநாயகத்தை இந்தியாவில் ஒழித்துவிட்டு, அமெரிக்காவில் இருப்பதைப் போல் ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவர வேண்டும் என்று நரேந்திர மோடி நினைக்கிறார். அப்படி கொண்டுவந்துவிட்டால், நாம் போட்டியிடுவதற்கு பிரச்சினை இருக்காது என்று மனக் கணக்குப் போட்டுக் கொண்டு இருக்கிறார். அதற்குள்ளாக அடிமரமே வெட்டுப் பட்டுப் போகும் என்பதை நான் நரேந்திர மோடி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

வேலூர் மாவட்டம் – அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் மருதவல்லிப் பாளையம் கிராமத்தில் இருந்து, அ.தி.மு.க. மற்றும் பா.ம.க.வில் இருந்து விலகி, 50க்கும் மேற்பட்டோர், அணைக்கட்டு கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், கோ.குமரபாண்டியன் ஏற்பாட்டில், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. முன்னிலையில், தி.மு.க.வில் இணைந்தனர். கணியம்பாடி ஒன்றியச் செயலாளர் என்.கஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்ஆர.சி.மணிமாறன், ஒன்றிய துணைச் செயலாளர் பூபாலன், மருதவல்லிப் பாளையம் எம்.ஜி.சசிதரன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் வி.எஸ்.தங்கவேல், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் தார்வழி குமார், மாவட்டப் பிரதிநிதி டி.ஏ.அஸ்லாம், ஒன்றியப் பொருளாளர் என்.செந்தில்குமார், ஒன்றியச் செயற்குழு உறுப்பினர் எம்.சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

துணை முதலமைச்சர் அவர்களின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் அமைந்துள்ள லேடி வில்லிங்டன் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டார். மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ள நிலையில் மழையின் காரணமாக கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து மாணவர்களின் வருகை குறித்து ஆசிரியப் பெருமக்களிடம் கேட்டறிந்தார். அப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் புதிய வகுப்பறை கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டார்.

தென்காசி வடக்கு மாவட்டக் கழக மருத்துவரணி சார்பில்

வாசுதேவநல்லூரில் இலவச மருத்துவ முகாம்!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில்!

தென்காசி, அக்.18 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவரணி சார்பில் தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர் பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில் இன்று (18.10.2024 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மாபெரும் இலவச மருத்துவ முகாம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

தமிழக மக்கள் முழு சுகாதாரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மருத்துவ முகாம்களை நடத்திட ஆணை பிறப்பித்துள்ளதை கருத்தில் கொண்டும், கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று (18ஆம் தேதி) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெறுகிறது.

தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் நடைபெறும் மாபெரும் மருத்துவ முகாம் நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், முன்னாள் எம்.பி. தனுஷ், எம்.குமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

வாசுதேவநல்லூர் பேரூர்ச் செயலாளர் ரூபி பாலசுப்பிரமணியம் வரவேற்புரையாற்றுகிறார்.

முகாமை தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செ.சு.செண்பகவிநாயகம், தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் வி.சுமதி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் அ.மணிகண்டன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

முகாமில் மருத்துவர்கள் ராதா, மணிகண்டன், செல்வமாரி, ஜெயக்கண்ணன், செண்பகவிநாயகம், சுமதி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். குறிப்பாக இந்த முகாமில் கல்லீரல் சுருக்கம், கல்லீரல் வீக்கம், கல்லீரல் கொழுப்பு இவைகளை கண்டறியும் பைபுரோ ஸ்கேன் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது.

நிகழ்வில் வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியச் செயலாளரும், ஒன்றியக் குழுத் தலைவருமான பொன்.முத்தையா பாண்டியன், தெற்கு ஒன்றியச் செயலாளர் பூசைபாண்டியன், மாவட்டப் பொருளாளர் இல.சரவணன், துணைச் செயலாளர் மனோகரன், வாசு பேரூராட்சி மன்றத் தலைவர் சுமங்கலி, லாவண்யா ராமேஸ்வரன், துணைத் தலைவர் லைலா பானு சேக்மதார் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

பூத் கமிட்டி அமைத்தல் - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் கலந்தாலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் பூத் கமிட்டி அமைத்தல் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

நாள் / நேரம்	தலைமைக் கழக பார்வையாளர்கள்	சட்டமன்ற தொகுதி	இடம்
22.10.2024 காலை 11 மணி	எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன்	மதுராந்தகம்	ஓட்டல் ஐவே ஜி.எஸ்.டி. சாலை மதுராந்தகம்
22.10.2024 பிற்பகல் 1 மணி	எஸ்.டி.இசை	செய்யூர்	அரேபியன் ஓட்டல் கல்பாக்கம்
23.10.2024 பிற்பகல் 2 மணி	சூர்யா வெற்றிக்கொண்டான்	உத்திரமேரூர்	உமாசேகர் திருமண மண்டபம் வாலாஜாபாத்
23.10.2024 மாலை 4 மணி	ப.அருண்குமார்	காஞ்சிபுரம்	கலைஞர் பவள விழா மாளிகை காஞ்சிபுரம்

எனவே, இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மட்டும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

க.சுந்தர் எம்.எல்.ஏ.
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி

ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் நியமனம் - நேர்காணல்!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு!

தென்காசி, அக்.18–

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணிக்கு ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள் நியமனத்திற்கான நேர்காணல் நிகழ்வு நாளை (19.10.2024 – சனிக்கிழமை) தென்காசி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது என தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

அது குறித்த விவரம் வருமாறு:–

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்புக்குழு ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் கழக மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன்எம்.எல்.ஏ. அறிவிப்பிற்கிணங்க கழக மாணவரணிக்கு தென்காசி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகளை நியமிக்க நேர்காணல் நாளை (19.10.2024) காலை 9 மணிமுதல் மதியம் 2 மணி வரை தென்காசி தெற்கு மாவட்ட மாவட்ட கலைஞர் அறிவாலயத்தில் மாநில தலைவர் ராஜீவ்காந்தி மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை பி.செந்தில்குமார் பூரண சங்கீதா ஆகியோர் நடத்துகின்றனர்.

எனவே நேர்காணலில் கலந்து கொள்பவர்கள் 30 வயதுக்குட்பட்டவராகவும் அல்லது கல்லூரியில் பட்டப் படிப்போ அல்லது பட்டய படிப்போ ஆகிய ஏதேனும் ஒன்று முடித்தவராகவோ அல்லது ஏதேனும் ஒரு கல்லூரியில் பயிலும் மாணவராக இருக்க வேண்டும்.

ஏற்கனவே மாவட்டக் கழகத்தில் மனு செய்தவர்களும், புதிதாக கலந்து கொள்பவர்களும் நேர்காணலில் கலந்து கொள்ளலாம். இதில் ஒரு அமைப்பாளர், 5 துணை அமைப்பாளர்கள் மற்றும் அதில் ஒரு பெண் துணை அமைப்பாளரும் நியமிக்கப்பட உள்ளனர். ஆகவே இப்பொறுப்புகளுக்கு ஆர்வமுள்ள மாணவ, மாணவியர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

தென்காசி தெற்கு மாவட்டம் – மேலகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் திராவிட மாடல் அரசின் விலையில்லா மிதிவண்டிகளை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர் அழகு சுந்தரம்,பேரூர்ச் செயலாளர் சுடலை,பேரூராட்சி தலைவர் வேணி, துணை தலைவர் ஜீவானந்தம், குற்றாலம் குட்டி, சுரேஷ், கபிலன், சிங்கதுரை உள்பட தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.